# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 103/2015 நாள்.12.08.2025

PW2- திருமதி.மீனா, க /பெ. திரு.தியாகராஜன்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது யார் என்றால் என் அப்பாதான். வழக்கு போட்ட சொத்து என்தாத்தாவின் பூர்விக சொத்து என்றால் ஆமாம். அந்த சொத்தில் எனக்கு மற்ற பிரதிவாதிகள் வாதிகளுக்கு தலா ஒரு பாகம் கிடைக்க உரிமை உண்டு என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி அசோக்குமார் வாதியாக இருந்து தன்னை பிரதிவாதியாக மாற்றவேண்டும் என்று மனுதாக்கல் செய்திருந்தார்என்றால் ஆமாம். மனுவில் என்ன விபரம் சொல்லியிருந்தார் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுவில் கோரபட்ட விபரம் எதுவும் தெரியாமல் முதல்விசாரணை வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு போட்ட சொத்துக்கள் இல்லாமல் மற்ற வீடு இருக்கிறது என்றும் அதை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி மணிமொழி என்ன பதில் போட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் எதுவும் மறுப்பு பதில் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். பதில் போட்ட விபரம் உண்மை என்பதால்தான் அதை மறுத்து நான் எதுவும் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரைதான் கேட்க வேண்டும். வழக்கு போட்ட சொத்து ஏற்கனவே வயலாக இருந்தது என்றும் அதை மனைகளாக பிரிக்க வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கேட்டுகொண்டோம் என்றால் ஆமாம். மனைபிரிவுகள் பிரிப்பதற்கு என்ன செலவு ஆகிறதோ அந்த செலவுதொகையை கொடுப்பதாக சொன்னோம் என்றால் எல்லாமே அவர்தான் எடுத்துகொண்டார். மொத்தம் எத்தனை மனைகள் என்றால் 42. அதில் எத்தனை மனைகள் விற்கபட்டது என்றால் 7. கிரய பத்திரத்தில் நான், வாதிகள் பிரதிவாதிகள் சேர்ந்துதான் விற்றோம் என்றால் ஆமாம். மனைகள் விற்கும்போது சொத்து பூர்விக சொத்து என்று சொல்லிதான் கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் ஆமாம். விற்பனை செய்து மனைகள் விற்ற தொகைகளை அவரவர் தொகைகளை

2ஆம் பிரதிவாதியிடம் செலுத்தவில்லை என்று சொன்னால் எல்லாமே அவர்தான் எடுத்துகொண்டார். அதில் அப்பாக்கு மட்டும் 2லட்சம் கொடுத்தார்கள். மொத்த எவ்வளவு தொகைக்கு விற்கபட்டது என்றால் தெரியாது சொல்லவில்லை. செலவு செய்ததொகையை எடுத்துகொண்டேன் என்பதை காட்ட அவரிடமிருந்து ஆவணம் எழுதி கேட்டோமா என்றால் இல்லை. மனைகள் விற்பனை செய்த தொகைகளில் 2ஆம் பிரதிவாதி எதுவும் எடுத்துகொள்ளவில்லை என்றும் எனது அப்பாதான் எடுத்து கொண்டார் என்றால் சரியல்ல. அதனால்தான் 2ஆம் பிரதிவாதியிடமிருந்து எந்த ஆவணமும் பெற்றுகொள்ளவில்லை என்றால் சரியல்ல பணம் கேட்டபோது அப்பாவை அடித்துவிட்டார். அதனால் தான் அப்பா வீட்டிலிருந்து வெளியேறிவிட்டார். தாவா சொத்துகளில் எனக்கும் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் தனிபட்டு எந்த உரிமையும் இல்லை என்றால் பாகம்தான் உள்ளது. அதனால் தனிபட்ட முறையில் எனக்கோ என்அப்பாக்கோ மற்ற நபர்கள் பெயரில் செட்டில்மெண்ட்டோ ஆவணமோ எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் ஆமாம். அதனால் என் அப்பா தாவா சொத்துக்களில் சில மனைகளை என் பெயருக்கு எழுதி கொடுத்தது தவறு என்றால் சரிதான். என் பெயரில் எழுதி வைத்த மனைகளை பொறுத்து நான் கிரயம் எழுதி கொடுக்க உரிமையில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை பொறுத்து எந்த உரிமையும் இல்லாமல் செட்டிமெண்ட் கிரயம் எழுதி கொடுத்தது 2ஆம் பிரதிவாதிக்கு தொகை கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக என்றால் சரியல்ல. 42 மனைகளில் 7 விற்றது போக 35 மனைகள் மணிமொழி அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. 2ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் வழக்கு இருக்கும்போதே வீடு கட்டியுள்ளார் இரண்டு மனைகளில் மீன் குட்டை வெட்டியுள்ளார். தாவா சொத்துக்கள் முழுவதும் 2ஆம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் இல்லை. பாகம் பிரிப்பது தொடர்பாக எதுவும் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது தேதி என்ன என்றால் ஞாபகமில்லை. பஞ்சாயத்தில் என்ன நடந்தது என்றால் அவருக்கு கேட்டதை ஒதுக்கி கொடுத்து பத்திரம் பண்ணும்போது அவர் தடுத்துவிட்டார். பஞ்சாயத்தில் பேசப்பட்டதை எழுதினார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 2ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்குவது தொடர்பாக பஞ்சாயத்து பேசப்படவில்லை என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி மணிமொழி மாதம் 5000 சம்பளம் வாங்கியது தொடர்பாக நான் எதுவும் பிராதில்

சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். அவர் ஜெசிபி, வைக்கோல் வியாபாரம் செய்கிறார் என்றால் ஆமாம். நிறைய தொழில் செய்கிறார் என்றால் தெரியாது. சகோதரி நித்யாவுக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் சரியா தெரியவில்லை. திருமணத்தில் என் தகப்பனார் கலந்துகொள்ளவில்லை என்றால் ஆமாம் திருமணத்தை 2ஆம் பிரதிவாதி மணிமொழிதான் செலவு செய்து செய்துவைத்தார் என்றால் தெரியாது. நான் கலந்துகொள்ளவில்லை என்றால் ஆமாம். மணிமொழி பெயரில் உள்ள கிரய பத்திரம் தாக்கல்செய்திருக்கிறேன் அது எந்த வருடம் வாங்கியது என்றால் இந்த ஆண்டுதான் வாங்கியது. நான்தான் மனுதாக்கல் செய்து வாங்கினேன் என்றால் ஆமாம். அதில் 2016 ஆம் வருடம் வாங்கியதாக குறிப்பு உள்ளது என்றால் ஆமாம். மணிமொழி சொத்துக்கள் வாங்கியிருக்கிறார் ஐஸ்வர்யம் நகர் என்று பிரித்துள்ளார் 11லட்சம் கடன் வாங்கியுள்ளார் என்றும் மற்றும் மனையை விற்றதிலிருந்து வாங்கியுள்ளார் என்று பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. ஐஸ்வர்யம் நகர் லேஅவுட் சொத்துக்கள்மணிமொழி அவருடைய தனிபட்ட வருமானத்திலிருந்து வாங்கியது என்றால் சரியல்ல இதை விற்றுதான் வாங்கினார். ஐஸ்வர்யம் நகர் மனை அதில் அடங்கிய புலஎண்களை நான் தாவாவில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். இந்த சொத்துக்களை தாவாவில் சேர்க்க மனுதாக்கல் செய்யபட்டு தள்ளுபடி செய்யபட்டது என்றால் ஆமாம். அந்த உத்தரவுக்கு எதிராக சீராய்வு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். மணிமொழி என் அப்பாவை அடித்ததாக சொல்வது உண்மையல்ல என்றும் அந்த மாதிரி சம்பவம் நடக்கவில்லை என்றும் வழக்கு தாக்கல்செய்வதற்காக அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் பாகம் பிரிப்பது தொடர்பாக போலிஸ் ஸ்டேஷனில் பஞ்சாயம் பேசினார்களா என்றால் ஆமாம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொன்னதை நம்பி 2ஆம் பிரதிவாதி தாவா சொத்தை மனை பிரிவு செய்ய செலவு செய்தார் என்றும் அதை ஏமாற்றுவதற்காக வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. நான் உண்மையான விபரம் சொல்லி வழக்கு தாக்கல் செய்யாததாலும், மற்ற குடும்ப சொத்துக்களை வழக்கில் சேர்க்காததாலும் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முன்னிலைபடுத்தபட்டது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.